**அசல் வழக்கு எண். 119/2021** **நாள்: 08.07.2025**

**வா.சா.2 திரு.பேச்சிமுத்து**

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி என்னை சாட்சியளிக்க வரச்சொன்னதால் தான் நீதிமன்றதிற்கு வந்தேன் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். வாதியுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் வாதியை சேர்த்து 4 பேர் ஆவர். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் தக்கப்பனார் பெயர் என்ன என்றால் அமலதாஸ் ஆகும் . வாதியின் தாயார் பெயர் என்ன என்றால் டெல்சி ராணி ஆகும்.

2) வாதி எங்கு வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் கும்பகோணத்தில் ஆசிரியராக பணியாற்றுகிறார். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் இல்லை வாதியின் தோட்டத்திற்கு வேலைக்கு செல்வேன். நான் சாட்சி கையொப்பமிட்ட ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியும் அது வயல், வீடு ஆகியவற்றை அமலதாஸ், டெல்சி ராணி இருவரும் அவரது மகன் வாதிக்கு உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார்கள். உயில் ஆவணம் எந்த ரூபாய் மதிப்பில் பத்திரம் வாங்கப்பட்டது என்றால் தெரியாது.

3) உயில் ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ரெஜிஸ்டர் ஆபிஸ்க்கு எதிரில் வைத்து எழுதினார். உயில் ஆவணம் யார் தயார் செய்தார் என்றால் தெரியாது. உயில் ஆவணத்தில் யார் கையொப்பம் செய்த பிறது நான் கையொப்பம் செய்தேன் என்றால் அமலதாஸ், டெல்சி ராணி இருவரும் கையொப்பம் செய்த பிறது நான் கையொப்பம் செய்தேன். உயில் ஆவணம் என்றால் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஒரு நபர் தன்னுடைய சொத்தை வேறு நபர்கள் கொள்ளையடிக்காமல் இருக்க தனது வாரிசுகளுக்கு சொத்தை எழுதிவைப்பது ஆகும்.

4) உயில் ஆவணத்தில் எத்தனை சொத்துக்களை காட்டியுள்ளார்கள் என்றால் 6 ஏக்கர் வயல், 3 வீடுகள் ஆகியவற்றை எழுதி வைத்துள்ளார். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. உயிலில் என்ன எழுதியுள்ளார் என்று தெரியுமா என்றால் படித்துக்காட்டினார்கள் தெரிந்துகொண்டேன். யார் படித்துக்காட்டினார்கள் என்றால்

அமலதாஸ், டெல்சிராணி இருவரும் படித்துக்காட்டினார்கள் பத்திரம் எழுதியவரும் படித்துக்காட்டினார். என்ன படித்துக்காட்டினார்கள் என்று கூற முடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு சொத்து ஏதாவது உயிலில் எழுதி வைக்கப்பட்டுள்ளதா என்றால் 3 பிள்ளைகளுக்கு செய்ய வேண்டியதை செய்து முடித்துவிட்டதாகவும் அதனால் அவர்களுக்கு சொத்து எழுதவில்லை என்றும் தனது மகனுக்கு மட்டும் சொத்து கொடுத்து எழுதியிருப்பதாகவும் சொன்னார்.

5) எந்த வருடம் எந்த மாதம் எந்த தேதியில் உயில் எழுதப்பட்டது என்றால் 21.08.2017 அன்று எழுதப்பட்டது. உயில் ஆவணம் எத்தனை பக்கத்தில் எழுதப்பட்டது என்றால் நான் பக்கத்தை எண்ணவில்லை. உயில் ஆவணத்தில் நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன் என்றாலும் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நான் மேற்படி உயிலில் எத்தனையாவது பக்கத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் 2 இடத்தில் கையொப்பம் வாங்கினார்கள் அது எத்தனையாவது பக்கத்தில் உள்ளது என்று ஞாபகம் இல்லை. நான் கையொப்பமிட்டதுபோல் எத்தனைபேர் கையொப்பமிட்டார்கள் என்றால் நானும் பரிசுத்தநாதனும் கையொப்பம் செய்துள்ளோம்.

6) நான் உயிலில் கையொப்பம் மட்டும்தான் செய்தேன் என்றாலும் அதில் பிரதிவாதிகளை பற்றி எழுதியுள்ள விவரங்களை பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.